ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

दारिद्र्यैकनिधेर्जनस्य हृदये दातव्यबुद्धिं परां
कार्पण्यं कमलाकटाक्षलहरीकल्लोलितस्यान्तरे ।
स्रष्ट्रा सृष्टवता फलं किमधुना लब्धं सुनिन्दां विना
तस्माल्लोकहितं च कर्म विमलं कार्यं प्रयत्नाद्बुधैः ॥

ஒவ்வொரு வேளையிலும் தம்ஆகாரத்திற்கு அதிகசிரமத்தை வகிக்கும் மிகவும் ஏழ்மைத்தனத்திலிருக்கின்ற ஜனங்களுக்கு நாம் எப்பொழுதும் தானம்செய்யவேண்டுமென்கிற பேரவாவையும், லக்ஷ்மியினுடைய கடாக்ஷ வீக்ஷணத்தால் அலைமோதும் செல்வப்பெருக்கையடைந்த ஸ்ரீமான்களுடைய சித்தத்தில் காற்பண்யத்தையும் சிருஷ்டித்தவரான பிர்மதேவனால் பலராலும் இவ்விதமுபயோகமற்ற வேலையை ஒருவன் செய்வானென்று கூறப்படும் நிந்தையைத்தவிர வேறுயாதொன்றும் அடையப்படவில்லை. ஆகையால் அறிஞர்கள் பிரயாஸப்பட்டாகிலும் எப்பொழுதும் லோகத்திற்கு ஹிதமான கர்மாவையே செய்யவேண்டும்.

சகல உலகங்களையும் சிருஷ்டிக்கும் சக்திபெற்றவரும் விண்ணவர்களுக்குள் சிறந்தவருமான பிர்மதேவன் மாறுதலாய் செல்வந்தர்களிடமிருக்க வேண்டிய ஈகையை அதற்கு அற்பமேனும் அருகரில்லாத ஏழைகளுடைய புத்தியிலும் இவர்களுடைய ஹிருதயத்திலிருக்கவேண்டிய கார்ப்பண்யத்தைத் தனிகர்களிடத்திலும், உபயோகமில்லாமல் ஏன்சிருஷ்டித்தாரென்று அவரைப்பலரும் நிந்திக்கிறார்கள். அனுசிதமான கர்மாவைஎவர்கள் செய்யப்புகினும் நிந்திக்கப் படுவார்களாகையால் புத்திசாலிகள் எப்பொழுதும் லோகக்ஷேமமான காரியத்தையே செய்யவேண்டும். பயனற்ற கர்மாவை ஒருசமயமும் அனுஷ்டிக்கக்கூடாதென்று அறிவிக்கப்படுகின்றது. சுபம்.

ஆர்ய தர்மம்.

ருதிரோத்காரி-௵ ஐப்பிசி-௴ ௨௰௨

நாரதரால்சுகருக்குஉபதேசிக்கப்பட்ட மோக்ஷஸாதன மார்க்கம்.

யௌவனம், ரூபம், வயது, பெண்டீர், செல்வம். ஜீவன், மித்திரன், ஆரோக்யம் மற்றுமுள்ள பிரியவஸ்துக்களின் வரவு இவைமுதலான யாவும் நாசத்தையடைவதற் கென்றே உற்பத்தியாகியிருக்கிறபடியால் அவை அநித்தியமானவை என்ற உண்மையையறிந்த வித்வான்கள் இவைகளுக்கேற்படும் நாசத்தால் அற்பங்கூட மோகத்தையடைய மாட்டார்கள். ஹே சுக! கேள் இன்னும் ஸ்பஷ்டமாய்க் கூறுகின்றேன். உலகத்திற்குப் பொதுவாய் ஏற்படும்; துக்கத்தைக்குறித்து ஒருவன் வியஸனிப்பது உசிதமா? அத்துக்கம் உண்டாவதற்குமுன் ஒருவனுக்குத் தெரிந்தால் அதைவாராமல் தடுப்பதற்கு ஸாத்தியமானால்வேண்டியமுயற்சி செய்யலாம். அதனால் பயன்படாமல் நேர்ந்துவிட்டால் அதைச்சிறிதும்கவனிக்கக்கூடாது. ஒருவன் பிறப்புமுதல் இறப்புவரையிலுள்ள தன்காலத்தைக் கணக்கிட்டால் அதில் அதிககாலம் துக்கானுபவமும் அற்பகாலம் சுகமாயிருந்தேனென்றுந்தான் கூறமுடியும் இவ்விதம் ஜன்மாமுழுவதும் இந்திரியங்களாலிழுக்கப்பட்டு பலவிதத் துன்பங்களையனுபவித்தாலும் அக்ஞானத்தால் அதையே விரும்புகிறார்களேயன்றி மரணமென்றால் பயப்படுகிறார்கள். எவன் இவ்வுலகத்திலுள்ள விஷயபோகங்களில் விருப்பங்கொள்ளாமல் வெறுப்படைகின்றானோ அவன் நித்யானந்தரூபமான பிர்மத்தையடைய மிகவும் தகுதியாகிறான். இவன்விஷயத்தில் சிறந்த மானிடஜன்

மாவைப்பெற்றும் அதற்குரிய பயனேயடையாமல் ஜன்மாவை வீண்செய்கிருனே, என்று மகான்கள்வியஸனிக்கமாட்டார்கள் மூடஜனங்கள் பொருளேயடையவேண்டி முன் ஒருவிதமான சங்கற்பத்தைச்செய்து அதுபூர்த்தியானல் மறுபடியும் வேறுவித சங்கற்பம், பிறகுவேறுவிதம் இவ்விதம் கடலில் இடைவிடாமல் விருத்தியடையும் அலேகளின் கூட்டங்கள்போல் மெம்மேலும் அவாப்பெறுக்கால்சங்கற்பபரம்பரைகளேச்செய்து அவைபூர்த்தியாகாததினுல் மிகுந்ததுக்கத்துடனே சரீரத்தையும் இழந்துவிடுகிருர்கள். அக்ஞான லதையை அடியோடறுத்து விலக்கிய அறிஞர்கள் சங்கற்பத்திற்கற்பமேனும் இடங்கொடாமல் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்கிருர்கள். உலகிலுள்ள சகல பதார்த்தங்களும் நாசத்தையடையப்போகின்றன. எவ்வளவு உன்னதபதவியிலிருப்பினும் முடிவில் தாழ்ந்த நிலேமையையடைந்துவிடும். ஒருவிதமான சம்பந்தம் ஏற்படுமாகில் அதற்குப் பிரிவு நிச்சயமாக உண்டு. ஜன்மாவையடைந்த எல்லாப்பிராணிகளும் மரணத்தையடைந்தே தீரவேண்டும். என்ற இவை போன்ற பலவிஷயங்களே நன்கறிந்த பண்டிதர்கள் ஒருவிஷயத்திலும் விருப்பத்துடன் அதை அடைதற்குரிய முயற்சியின்றி பரலோக ஸாதனங்களேத் தேடிக்கொண்டிருப்பார்கள். எப்பொழுதும் சென்றுகொண்டிருக்கும் வயதானது ஒரு நிமிஷங்கூட நிற்காமல் போய்க்கொண்டே யிருக்கும். இச்சரீரமோநீர்மேல் தோன்றும் நிலேயற்ற குமிழியையொக்கும். பசியால்வருந்திய புலியானது வெகுசுலபமாய்ப் பசுவைப் புசிப்பதுபோல் இயமன் வாயைத்திறந்துகொண்டு பிராணிகளேப் புசித்துக்கொண்டே வருகிருன். ஒருவஸ்துவில் அபிமானம் வைப்பதைக் காட்டிலும் துக்கத்திற்கு வேறுகாரணமில்லே. அதை விலக்குவதே உத்தம சுகத்திற்குக்காரணம். ஆகையால் இவைகளேயெல்லாம் நன்காலோசித்துத் துக்கத்தையடையாமலிருக்க முயற்சிக்கவேண்டும். நாம் அடையும் துக்கத்திற்கு ஆண்குறி, உதரம், பாணி பாதம், கண், காது, மனம் என்ற இவைகளே காரணமாவன. முதலிற் கூறப்பட்ட இரண்டையும் தைரியத்

தால் ரக்ஷிக்கவேண்டும். அடுத்த இரண்டையும் நேத்திரத்தால் பாதுகாக்கவேண்டும். கண், காது இவைகளை மனதால் அடக்க வேண்டும் மனதுவாக்கு இவ்விரு கரணங்களையும் வித்யையால் ஸ்வாதீனம் செய்துகொள்ளவேண்டும்.

धृत्या शिश्नोदरे रक्षेत् पाणिपादं च चक्षुषा ।
चक्षुःश्रोत्रे च मनसा मनोवाचं च विद्यया ॥

என்ற வாக்கியங்களால் இக்கருத்தை வெளியிட்டிருக்கிறார். இவ்விதமிவைகளாவ் ஸ்வாதீனம் செய்துகொண்டு மற்றுமுள்ளவைகளில் சிநேகத்தைப் பாராட்டி பந்தத்திற்குள்ளாகாமல் யாவையும் விலக்கிவிட்டு ஆத்மஸ்வரூபத்தில் எப்பொழுதும் சித்தத்தை நாட்டி அதையே ஸகாயமாய்ப் பிடித்துக்கொண்டு சஞ்சரிப்பானுகில் இவ்வுலகில் விசேஷ சுகத்தையும் பரலோகத்திலும் உத்தமமான ஸ்தானத்தையடைவான். ஆகையால் ஹெ சுக! நீயும் இவ்விதமிருந்து சிரேயஸ்ஸையடைய வேண்டுமென்கிற கருத்துடன் கூறிய இவ்வுபதேசம் முடிவுபெற்றது.

ஜம்புகேச்வரத்தில்

நவராத்திரி மகோத்ஸவம்.

பூர்வபீடிகை.

ஜம்புகேச்வரமென்னும் திருவானைக்காவலில் இவ்வருடம் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளாகிய ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளவர்களால் ஸ்ரீ சாரதா நவராத்ர மகோத்ஸவம் நடத்தப்பட்டதென்பதை யாவருமறிவர். இதன் சிறப்பைப்பற்றி அங்கு போய் தரிசிக்காத ஆஸ்திகர்களுக்கு உபயோகமாகுமாறு எழுதலாமெனத் துணிந்தேன். ஸ்ரீமத் குரு

மூர்த்தி பிரதி வருடமும் நடத்தும் உத்ஸவமே, இவ்வருடமும் நடந்ததென்ருலும் இவ்வருடம் ஜம்புகேசுவர க்ஷேத்திரத்திலேயே நடந்தது, ஓர் பெரிய சுபகார்ய மென்பதே யாவருமறியலாம். அதாவது இக்கருணமூர்த்தி லோகத்தின் க்ஷேமார்த்தமே, அவரித்தவரென்பதை ஏற்றுக் கொள்ளாதவர் யாருமிலர். அத்தகைய இம்மகான் இத்திருவானைக்காவலில் சென்ற சித்திரைமாதம் ஸ்ரீமத் ஆதி பகவத்பாதர் ஸ்ரீ அகிலாண்டேசுவரிக்குச் செய்துவைத்த தாடங்கத்தின் பிரதிஷ்டையை ஸர்வலோகத்து ஜனங்களும் கொண்டாடத்தக்க விமரிசையுடன் நடத்தி வைத்தார்கள். அதனல் அகிலாண்டேசுவரியின்கலை ஸுமுகமாய் விசேஷமாய் நர்த்தனம் செய்கிறது. பிறகு யதோக்தமாய் யாதொரு குறையுமின்றி மண்டலாபிஷேகத்தையும் பூர்த்தி செய்தனர். அதன் பிறகு அநேக பக்தர்களின் பிரார்த்தனனுஸாரமாய்த்திருவானைக்காவலைவிட்டு விஜய யாத்திரையாய் மேற்றிசையில் கரூர்வரையில் விஜயம் செய்தனர். அங்கு ஒவ்வொரு கிராமத்திலும் மகானை எதிர்கொண்டழைக்கும் பாக்கியம் பெற்ற கனவான்கள் செய்த மரியாதைக்குக்கணக்கல்ல. பிறகு இன்னும் அப்பிராந்தியத்தில் வெகு கிராமத்தார் வந்து தங்கள் கிராமத்திற்கு விஜயம் செய்துஎங்களைக்கிருதார்த்தர்களாக்கவேண்டுமென்று மன்றாடியும் சாதுர்மாஸ்ய சங்கல்பத்திற்கு நாள் நெருங்கி விட்டதென்றும் அதற்காகத் திருவானைக்காவலுக்குப் போகவேண்டுமென்றும் உத்தரவளித்து விட்டனர். அம்மகாஸங்கல்பத்தையும் இங்கு தான் நடத்த வேண்டுமென்று கரூர்முதலிய விடங்களில் வெகு ஜனங்கள் வேண்டினர். அதற்கு இடம் கொடாமல் அதிவேகமாய் ஸ்ரீ ஜம்புகேசுவரத்திற்கே விஜயம் செய்தனர். அதனல் அந்தகிராமத்துமகாஜனங்கள்

निवसन्तु सुखेनात्र गमिष्यामः कृतार्थताम् ।
यथाशक्ति च शुश्रूषां करिष्यामो वयं मुदा ॥

தாங்கள் இங்கு சுகமாய் வஸிக்கவேண்டும் நாங்களும் புண்யசாலிகளாய் ஆகிறோம், சக்திக்கேற்றவாறு நாங்கள் சந்தோஷ

மாய்த் தங்களுக்குப் பணிவிடை செய்கிறோம் என்ற சாதுர் மாஸ்யப் பிரார்த்தனைப்படி பிரார்த்தித்தும் வீணாய்ப் போய் விட்டதே என்று ஒருவாறு முதலில் கொஞ்சம் வருத்தமடைந் தனராயினும் இதற்கு முதல் சுலோகமான

अहं तावन्नियच्छामि सर्वभूतहिताय च ।
प्रायेण प्रावृषि प्राणिसंकुलं वर्त्म दृश्यते ॥
अतस्तेषामहिंसार्थं पक्षान्वै श्रुतिसंश्रयान ।
स्थास्यामश्चतुरो मासानत्रैवासति बाधके ॥

மழைகாலத்தில் அநேகமாய் எங்கும் மார்க்கங்களில் பிராணி கள் வியாபித்திருக்கும். ஆதல்பற்றி அவைகளுக்கு என்னால் கெடுதலேற்படாமலிருத்தலின் பொருட்டு ஒரு பக்ஷம் என்பது ஒருமாதம் என்று வேதம் கூறுகின்ற கணக்கின்படி நான்கு மாதகாலம் தங்களுக்கு பாதகமில்லாவிடில் இங்கு வசிக்கிறேன் என்றுஸன்னியாஸிகள் கேட்டபிறகல்லவா நாம் அந்தசுலோகப் படி பிரார்த்திக்க வேண்டும். அப்படியே மகாஸன்னிதானம் திருவாய் மலர்ந்தருள்வில்லையாகையால் முடவன் கொம்புத் தேனுக்காசை கொள்வதைப் போல் நமது அவாவுமாகலா மென்று தேறுதல் செய்து கொண்டனர். இவ்விதம் சாதுர் மாஸ்யத்தை விதிப்படி ஆசார்யாள் முடித்தனர். பிறகு விசுவ ரூப யாத்திரை புறப்பட்டவுடன் நகரத்து தனவான்களான சில செட்டிமார்கள் சாதுர்மாஸ்யத்திற்கே தங்களது கிராமங் களுக்கு விஜயம் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தும் நிறை வேறாமற்போனபடியால் நவராத்ரமஹோத்ஸவத்தை யாவது நமது நகரங்களிற் செய்வித்து நாம் தர்மத்தை ஏராளமாய் மூட்டையாய்க் கட்டிவிடலா மென்றெதிர் பார்த்திருந்தும் கருணாமூர்த்தியான ஸ்ரீமஹாஸ்வாமிகள் பக்கத்துச் சிலகிராமங் களுக்கு மட்டும் விஜயம் செய்துவிட்டு மறுபடியும் நவராத்ர மகோத்ஸவத்தை நடத்தத்திருவானைக் காவலுக்கே விஜயம் செய்தனர். இதன் தத்வமிது இதைநாம் தெரிந்துகொண்

டால் நாம் சாதுர்மாஸ்யத்திற்கும் நவராத்ர மகோத்ஸவத்திற்கும் பிரார்த்தித்தும் நமக்கு அனுக்கிரகம் செய்யவில்லையே என்று பச்சாத்தாபப்பட இடமிராதென்று நினைக்கிறேன். அதாவது ஆதியில் பகவத்பாதர் நம் தேசத்தின் க்ஷேமத்தை முக்கியமாய்க் கருதியே காஞ்சியில் ஸ்ரீ காமகோடி பீடத்தை ஸ்தாபித்தனர். அங்கு காமாக்ஷியம்மனுக்கிருந்த உக்கிரகலையை வெளிச் செல்லவொட்டாமல் அப்பீடத்திலிருத்தினர். பிறகு மத்தியதேசாலங்காரமான திவ்யக்ஷேத்திரமான ஜம்புகேஸ்வரத்திலும் தவத்தின்மகிமையால் கொடூரப்பார்வையை அடைந்த அம்மை அகிலாண்டேசுவரியின் கலையை நயமாய் தாடங்கத்திலமைத்தனர். ஆகவே இவ்விரண்டு க்ஷேத்திரமும் நமது பகவத்பாதருக்கு இரண்டு நேத்திரங்களாயின. அவ்விதமே தான் அப்பரம்பரையில் வரும் நமது பரமாசார்யர்களுக்குமென்பதைச் சொல்லவேண்டுமோ. அத்தகைய இந்த க்ஷேத்திரங்களில் காலகதியால் அம்பாளின் சக்தி சற்று சிரமபரிகாரம் செய்து கொள்வதாய் இருப்பதைப் பார்த்தார்கள். அதாவது எண்ணெயும், திரியும் இருக்கிற விளக்கில் சுடர் தட்டாமலிருந்தால் பிரகாசக்குறைவு போல் காணப்படுமல்லவா. அது போல் குறைந்த பிரகாசமான அம்பாளின் கலையைக் கொஞ்சம் தூண்டினால் தான் நமது தேசம் இன்னும் கொஞ்சகாலம் ஆஸ்திக்யம் பெற்று விளங்கும் என்று எண்ணம் கொண்டு அதற்குத் தகுந்த ஆதிபகவத்பாதரது சக்திபெற்ற இம்மஹான் சுமார் 6-வருடங்களுக்கு முன்னமேயே தாடங்கப்பிரதிஷ்டைக் கென்றே தமது வாஸஸ்தலமான கும்பகோணத்தைவிட்டு விஜய யாத்திரையாக வெளியேகினர். அவ்விதம் யாத்திரையாய் பலவிடங்கள் விஜயமாகினர். ஆங்காங்குள்ள பக்தகோடிகளும் ஆதிபகவத்பாதரென்றே இம்மூர்த்தியையும் எண்ணலாயினர். அதிகமாய் வளர்ப்பானேன். இம்மகானை தரிசித்த அன்யமதஸ்தர்கள் கூட நம் தெய்வம் இவ்வுருவம் கொண்டதென்று கொண்டாடினர் என்பது யாவருக்கும் பிர

காசம். அவ்விதமே திருவானைக்காவலில் தாடங்கப்பிரதிஷ்டையைச் செய்தனர். பிறகு காஞ்சிக்ஷேத்திரத்திற்கும் உடனே விஜயம் செய்வது அஸாத்திய மென்றும் இந்த க்ஷேத்திரத்திலும் இன்னும் கலாபாகத்தை விருத்தி செய்யவேண்டுமென்ற வெண்ணம் கொண்டு தற்காலசாந்தியாய் ஸ்ரீ காமாக்ஷியின் ஆராதனத்திற்காக இங்கிருந்தே சில சாஸ்திரக்ஞர்களான வைதிக பக்தர்களுக்கு வைதிக தீக்ஷை செய்வித்து வைதிக பூஜையை சரிவர நடத்தும்படி அவர்களுக்கு ஆக்ஞாபித்தனுப்பினர். ஆகவே இங்கு ஸ்ரீ அகிலாண்டேசுவரிக்கு தாடங்கப்பிரதிஷ்டை செய்து மண்டலாபிஷேகம் செய்ததிலிருந்துகலாபாகம் தோன்றிவிட்டபோதிலும் அதைக்குறைவற நிலை நிறுத்துவதற்காகவே சாவகாசமாய் சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தில் இரண்டு மாதங்களும் அங்கு தங்கியிருந்து பரபரப்பில்லாமல் அம்பாளின் கலையைப் பிரகாசப் படுத்தி அதிலிருந்து தமது தவமகிமையையும் விரதோபவாஸ சக்தியையும் வளரச்செய்து கொண்டு அதன் மூலம் லோகானுக்கிரகம் விசேஷமாய் ஆகலாமென்று எண்ணினாற்போல் தான் இரண்டாம் தடவை ஜம்புகேசுவரத்திற்கே விஜயம் செய்தனர். பிறகு நவராத்ர மஹோத்ஸவமென்பது தேவியைமட்டிலும் பொருத்ததினால் இம்மகாதேவியின்கலையை இங்கு தான் விசேஷமாய்க்காணலாமென்றும் இதிலிருந்து தான் பக்தர்களும் விசேஷசுகம் பெறலாமென்றும் உத்தேசம் கொண்டவர்கள் போல் மூன்றும் தடவையும் இங்கு விஜயமாயினரென்று என் அற்பபுத்திக் கேற்பட்டதைத் தெரிவித்தேன். இனி நவராத்திரியின் விசேஷத்தையும் அதை அடுத்துவந்த விசேஷங்களையும் அடுத்தபத்திரிகையில் தெரிவிக்கிறேன்.

சுபம்!

எம். என். சுப்பிரமணியசாஸ்திரிகள்

அத்வைதஸபாபண்டிதரான பிரும்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகளவர்களால் இவ்வருஷம் நடந்த அத்வைதஸபையின் ஆரம்பதினத்தில் உபந்யஸிக்கப்பட்ட

ஸ்ரீ பகவத்பாதாள் அவதாரமகிமை.

(௩௦௪-வது பக்கத்தொடர்ச்சி.)

ஆசார்யாளின் பாஷ்யங்களை வாசித்துப்பார்த்தால் அவருடைய அபாரமஹிமையில் ஏகதேசம்மாத்திரம் விளங்கலாம். மஹாகாவியங்களிலும் காணக்கிடைக்காத பாஷா மாதுர்யத்தையும், ஆழ்ந்து பார்க்கப்பார்க்க அதிகமாகும். ஆனந்தத்தைக்கொடுக்கும் வாக்கியார்த்த ப்ரதிபாதனங்களையும், ச்ருதிப் பிராமாண்யத்துக்குள்ளடங்கி விளங்கும் ஸரஸமும் ஸங்கிரஹமுமான ஹேதுபன்னியாஸங்களையும் வாசித்து அனுபவித்தவர்களுக்கு ஆசார்யாளின் மஹிமை ஒருவாறு தெரியும். தீக்ஷிதரவர்களும் 'பிரஸன்னமாகவும் கம்பீரமாகவும் உள்ள ஆசார்யாளுடைய சரித்திரங்கள் ஸர்வோத்கிருஷ்டமாக விளங்குகின்றன' என்று சொல்லி தமது ஒருகிரந்தாரம்பத்தில் மங்களாசரணம் பண்ணியிருக்கிறார்.

अधिगतभिदा पूर्वाचार्यानुपेत्य सहस्रधा
सरिदिव महीभेदात् संप्राप्य शौरिपदोद्गता ।
जयति भगवत्पादश्रीमन्मुखाम्बुजनिर्गता
जननहारिणी सूक्तिः ब्रह्माद्वयैकपरायणा ॥

ஆசார்யாளின் வாக்கியங்கள் ஸாதாரணமாய் வாசித்தாலும் அர்த்தம் விளங்கும். ஆழ்ந்து சிந்தித்தால் அநேகவிதமாய் பிரஸரிக்கக் கூடிய அர்த்த விசேஷங்களிருப்பதாகத் தெரியும். ஆசார்யாளுடைய வாக்கியங்களை ஆதாரமாகக்கொண்டே பின்னால் வந்தவர்கள் பிரதிபிம்பவாதம் அபச்சேதவாதம் முதலிய

அநேககோடிகள் ஸமர்த்தனம் செய்திருக்கிறார்கள். கங்கையின் ஜலம் ஒரேமாதிரியாயிருந்தாலும் அதுஓடும் ஸ்தலத்தை யநுஸரித்து அதற்கு நிறம் குணம் முதலியவை எப்படி மாறுகிறதோ அப்படியே ஆசார்யாளின் ஸூக்திகளானது அவருக்குப்பின்னால் வந்தவர்களின் புத்திபேதத்தால் வெவ்வேறு அர்த்தங்களை கொடுக்கிறாப்போல் தோன்றுகிறதென்று பொருள் தீக்ஷிதாவர்கள் ச்லோகத்தில் அடங்கியிருக்கிறது. வேதாந்த சாஸ்திரம் என்று பெயர் வைத்துக்கொண்டு புதிதானப்ரக்ரியைகளையும் முடிவில்லாமல் வளரும் தர்க்கங்களையும் அவலம்பித்து பிற்காலக்ரந்தகர்த்தாக்கள் வாதங்களில் மாத்திரம் ருசிகண்டவர்களாய் விட்டார்களென்று சிலர்தோஷம் கூறுகிறார்கள். அதுஎந்த மட்டில் உண்மையென்று விசாரணீயம். எப்படியிருந்தாலும், அது ஆதுனிகர்களுடைய தோஷமேயல்லாமல், பூர்வாசார்யாளுடைய தோஷமல்லவென்று, மேற்சொன்ன உபமையைச் சிந்தித்தால் விளங்கும். ஆசார்யாளின் அத்விதீயமான புத்தி ஸாமர்த்தியத்தை பாச்சாத்தியாரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

பகவத்பாதாளுடையஅநேகசிஷ்யர்களுக்குள் ஒருவரிடத்தில் இதரர்களுக்குப் பொறாமையிருந்தது, அந்த சிஷ்யர் ஒரு சமயம் கங்கையின் நடுவில் ஒரு திட்டில் திடீரென்று பெருகி விட்ட பிரவாகத்துக்கிடையே அகப்பட்டுக் கொண்டபோது, அவரை ஆசார்யாள் உடனே வரும்படி கூப்பிட்டார். முன் பின் யோஜியாமல் அவர் அலைகள் மேல் நடந்தபோது நதியின் அடியிலிருந்து பத்மங்கள் உண்டாகி அவர் கால்களைத்தாங்கிக் கொண்டன. இவ்வற்புதத்தை மற்ற சிஷ்யர்கள் பார்க்கச் செய்து பகவத்பாதாள் சிஷ்யனுக்கு ஆசார்யரிடத்தில் இருக்க வேண்டிய பக்தி லட்சணத்தை வெளியிட்டார். அவ்விதம் ஆசார்ய பக்தியிருந்த சிஷ்யருக்குத்தான் பத்மபாதர் என்று பெயர் வழங்கலாயிற்று. ஆசார்யாள் அத்வைதப் பிரசாரம் செய்துகொண்டு ஸ்நானார்த்தம் பிரயாகை க்ஷேத்ரத்துக்கு சிஷ்யர்களுடன் போனார். ஸந்நியாஸியான அவருக்கு தீர்த்தங்

களினுலும் க்ஷேத்ரங்களினுலும் ஒன்றும் ஆக வேண்டியதில்லை யாயினும் உலகத்தாருக்கு சிரத்தையுண்டுபண்ணுவதற்காகவே அவ்விதம் செய்தார். பிரயாகையில் ஒருநாள் ஆசார்யாள் கங்கையில் ஸ்நானம் செய்துவிட்டு சிஷ்யர்களுடன் வந்து கொண்டிருக்கும் வழியில் பகவான் பரமேசுவரனே ஒரு சண்டாள வேஷம் பூண்டு நான்கு வேதங்களும் நாய்கள் ரூபமாய் உடன் வர எதிர்ப்பட்டார். அதைக் கண்டு சிஷ்யர்கள் சண்டாளனை விலகச் சொல்ல, "யார் விலக வேண்டியது, என் ஆத்மாவா? சரீரமா?" என்று தத்வஞாபகமான மொழிகளைச் சொல்ல ஆசார்யாள் ஞானதிருஷ்டியால் எதிரிலிருப்பவர் இன்னுர் என்று தெரிந்துகொண்டு "மனீஷாபஞ்சகம்" என்று ஐந்து சுலோகங்களால் ஆத்மஸ்வரூபத்தை நிர்ணயம்செய்து வெளியிட்டார்.

ஆசார்யாள் அவதாரத்துக்கு முன்னேயே ஷண்முகரின் அவதாரமான பட்டபாதாள் அவதரித்திருந்தார். அதற்கு முன் பௌத்தர் முதலானவர்களால் பரவியிருந்த நாஸ்திக்கியத்தையும் போக்கி ஜனங்களுக்குள் ஆஸ்திக்கியம் உண்டுபண்ணி வேதத்தில் கர்மகாண்டத்தில் பூர்ண நம்பிக்கையும் அனுஷ்டானத்தையும் ஸ்தாபிக்க வந்தவர்தான் பட்டபாதர்.

புத்தாவதாரத்தை தசாவதாரங்களில்ஒன்றுக நாம் ஒப்புக்கொள்கிறேும். விஷ்ணுபுராணத்திலும் ஸ்ரீமத் பாகவதத்திலும் ஸூதஸம்ஹிதையிலும் புத்தாவதாரத்தைப் பகவதவதாரமாக அங்கீகரித்து வசனங்கள் இருக்கின்றன. வேதப் பிராமாண்யத்தையும் வேத மூலதத்வத்தையும் ஒப்புக்கொள்ளாமல் புத்தர் அனேக தர்மோபதேசங்கள் செய்திருக்கிறுர். அவர் உபதேசித்திருக்கும் தர்மங்களில் அனேகமாய் எல்லாம் நமது ச்ருதிஸ்மிருதிகளில் காணப்படுபவைகள் தான். அஹிம்ஸை, அஸ்தேயம், க்ஷமை, முதலிய ஸாமான்ய தர்மங்களையும், சமதமாதி ஆத்மகுணங்களையும் புத்தர் விசேஷமாய் வற்புறுத்தி உபதேசம் செய்திருக்கிறுர். அவைகள் நமக்கு அக்ராஹ்யம்

என்பதில்லே. ஆனல் வேதப்பிராமாண்யத்தினல் அவைகள் நமக்கு தர்மமாகின்றன. இதுதான் வித்தியாஸம். பட்டபாதர் शिष्टा कोपे विरुद्धं चेत् என்ற ஜைமனி ஸூத்ரத்தை வியாக்யானம் செய்யும்போது புத்தர் உபதேசங்களும் ஸதுபதேசங்களாயிருப்பதினல் கிராஹ்யங்கள் தானே என்ற பூர்வபக்ஷத்தை உத்தாபனம் செய்துகொண்டு வேதமூலத்வத்தை ஒப்புக்கொள்ளாததினல் அவைகள் ஆஸ்திகர்களுக்கு உபாதேயமன்று என்று நிரூபணம் செய்திருக்கிறர். அந்த ப்ரகரணத்தில், எப்படி ஒருநாய்த் தோலாற்செய்த பாத்திரத்தில், கங்காஜலத்தையோ, பசுவின் பாலேயோ வைத்தால், அது உபயோகார்கமில்லேயோ, அப்படியே நல்ல உபதேசங்களும் வேதமூலமில்லாமற் போனல் அங்கீகரிக்கத்தக்கவையல்ல என்று திருஷ்டாந்தம் சொல்லியிருக்கிறர். ஆசார்யாள் ஸூத்ரபாஷ்யத்தில் ஸித்தாந்த விரோதமான ஸௌகதஸமயத்தின் சில ப்ரக்ரியை மாத்திரம் கண்டித்திருக்கிறர். புத்தரின் தர்மோபதேசங்களேப் பற்றி ஆசார்யாள் ஒன்றும் சொல்லவில்லே. வேதப்ராமாண்யத்தை அங்கீகரிக்காதவரான புத்தரை பகவதவதாரமாக ஒப்புக்கொள்ளலாமா என்று ஒரு ஆசங்கையுண்டாகலாம். அவ்விதம் நினேப்பது நியாயமன்று. புத்தாவதாரமும் ராமகிருஷ்ணுத்யவதாரங்களேப் போல் யுகே யுகே ஸம்பவிக்கிற நித்யமான அவதாரங்களுள் ஒன்றென்றும், அந்த அவதாரத்துக்கேற்பட்டதான விசேஷகாரியங்கள் உண்டென்றும் நமது புராணங்களில் தெரிகிறது. சிலவிதமான அதிகாரிகளே உத்தேசித்தும் அர்த்தகாம பரர்களாயிருந்த ஜனங்களே விசாரவழியில் திருப்பி அஹிம்ஸாதி தர்மங்களில் ப்ரவிருத்தியுண்டாக்கி ஸம்ஸாரத்தில் வைராக்கிய முண்டாக்குவதற்காக புத்தர் தமது உபதேசங்களேச் செய்தார். சிஷ்யர்களுடைய புத்திபேதத்தை யனுஸரித்து பாஹ்யார்த்தங்கள் அத்தியந்தம் அஸத் என்றும் க்ஷணிகமென்றும் உபதேசம் செய்து பாஹ்யபிரபஞ்சத்தில் புத்தர் தமது சிஷ்யர்களுக்கு மித்யாத்வ புத்தியை யுண்டுபண்ணியிருக்கிறர். பாஹ்ய ப்ரபஞ்சத்தின் ஸத்யத்வத்தை நிராகரிப்ப

னினும் விவேக வைராக்யங்களில் ஸம்பாதிக்கப் பட்ட ஞானத்தால் தான் மோக்ஷமுண்டாகுமென்று சொல்வதினாலும் பௌத்தன் அத்வைத ஸித்தாந்தத்துக்கு நெருங்கிவருகிறவன். புத்தருடைய அபாரசக்தியையும் அவர் செய்திருக்கும் காரியங்களையும் அவருடைய பூதாநுகம்பித்வத்தையும் லோகோபகார ப்ரவிருத்தியையும் நாம் ஆலோசித்தால் அனுமானத்தினால் கூட நாம் அவரை அவதாரமென்றே கொள்ளவேண்டும். அந்த அவதாரத்தின் சில காரியங்கள் அப்ராமாணிகமாகத் தோன்றினாலென்ன ! சார்வாக ஸூத்ரங்களை பிருஹஸ்பதி பகவான் செய்ததாகச் சொல்லுகிறோம். அவர் நாஸ்திகரா ! ராம கிருஷ்ணாத்யவதாரங்களில் நாம் அறியக்கூடாத தோஷங்கள் போலத்தோன்றும் சில அம்சங்கள் இல்லையா. மேலும் மீமாம்ஸகர்களும் ஸாங்கியர்களும் ஈசுவரனை ஒப்புக் கொள்வதில்லை. அவர்களை ஆஸ்திகர்களாக நாம் பரிகணனம் பண்ணுகிறோமல்லவா வேதப்ராமாண்யத்தை ஒப்புக் கொள்ளாத குற்றத்தைக் காட்டிலும், நிரீசுவரவாதம் குறைவான குற்றமா ? ஆகையினால் பகவானுடைய அவதாரங்களும் காரியங்களும் நமது யுக்தியைக்கொண்டே நிறுத்து அறிந்து விடமுடியாத துரூஹமானவிஷயங்களென்று நாம்தெரிந்துகொள்ளவேண்டும். ஆனந்தகிரி ஆசார்யாளும் ஸர்வக்ஞர் என்ற விசேஷத்தோடு புத்தரைப்பற்றி வ்யவஹரித்திருக்கிறார்.

பரமேசுவரன் த்ரிபுரஸம்ஹாரம் செய்தபின் அஸுரர்கள் கோபங்கொண்டு தேவர்களை நாசம் செய்வதற்காக அதர்வண வேதத்திலுள்ள மந்திரங்களை உபயோகித்து விசேஷஸித்திகளை அடைந்தபோது, தேவர்களைக்காப்பாற்றுவதற்காக அஸுரர்களுக்கு வேதத்தில் அப்ராமாண்ய புத்தியை யுண்டுபண்ணி அவர்கள் பலத்தை குலைப்பதற்காக பகவானே புத்தாவதாரம் செய்து அஸுரர்களுக்கு வேதங்களில் அப்பிராமாண்யத்தை உபதேசித்ததாக நமது புராணங்களில் சொல்லியிருக்கிறது. ஆகையால் ஒவ்வொரு சமயங்களில் ஒரு விசேஷமான உத்தேசத்தை நிறைவேற்றவரும் பகவதவதாரம்தான் புத்தர் என்று

அங்கீகரிக்கவேண்டும். புராணங்களில் சொல்லப்படும் புத்தரைத்தவிர பிற்காலத்தில் வேறொருபுருஷர் அந்தப்பெயருடன் இருந்ததாகத் தெரியவருகிறது. நமதுதேச சரித்திரத்தில் சுமார் 2500 வருஷங்களுக்குமுன் இருந்ததாகச்சொல்லும்புத்தர்புராணங்களில் சொல்லப்படும் புத்தரைக்காட்டிலும் வேறுனவர்என்று நினைக்கவேண்டியதாயிருக்கிறது. புத்தாவதாரகார்யம் இவராலும் செய்யப்பட்டிருப்பதால் இவருக்கும் அந்தப் பெயர் ஏற்பட்டிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

பௌத்தமதக்கொள்கைகளை நிரஸனம் பண்ணினவரான பட்டபாதர் பால்யத்தில்தான் பௌத்தாசார்யர்களிடம் அவர்கள் மதாஹஸ்யங்களைத் தெரிந்துகொள்வதற்காக கபடமாக பௌத்தன்போல வேஷம்பூண்டு அவர்கள் மதத்தைக்ரஹித்த தோஷத்துக்காக துஷாக்னிப்ரவேசம் பண்ணப்போனபோது நமது ஆசார்யாள் வாதத்துக்காக இவரிடம் வந்தார். ஆனால் அவர் இடங்கொடாமல் தன்னுடைய முக்கிய சிஷ்யரானமண்டனமிச்ரரிடம்ஆசார்யாளையும் போகச்சொல்லிவிட்டுதான் அக்னிப்ரவேசமானார். பிறகு ஆசார்யாள் காச்மீர தேசத்தில், திண்ணையில் கூட்டிலிருக்கும் கிளிகளும்கூட வேதங்கள் ஸ்வத: பிரமாணமா, பரத: பிரமாணமா? என்றுசர்ச்சைசெய்யும்விசேஷம் வாய்ந்ததாகிய மண்டனமிச்ரர் கிருஹத்தையடைந்தார். அப்போது சிராத்தம் செய்துகொண்டிருந்த பிரம்மாவின் அவதாரமான மண்டனமிச்ரரை ஸ்ந்நியாஸியான ஆசார்யாள் வீட்டுக்குள் புகுந்து எதிர்ப்பட்டு மண்டனமிச்ரருக்கு ஆக்ரஹம் உண்டாகி இருவருக்கும் பெரிய விவாதம் உண்டாயிற்று. அந்த சமயம் ஜைமினியாசார்யாரும் வ்யாஸாசார்யாளும் அங்கே இருந்தனர். ஆசார்யாள் எதிரியை ஜயித்தார். பிறகு ஸரஸ்வதியின் அவதாரமான மண்டனமிச்ரரின் பத்தினி ஆசார்யாளை வாதத்துக்குக்கூப்பிட ஸந்நியாஸியானதால் காமகலையில் மாத்திரம் உத்தரங்கள் சொல்லமுடியாமல், அங்கிருந்து சற்றுகாலம் விடைபெற்றுக்கொண்டு, தன்னுடைய ஸ்தூலசரீரத்தை சிஷ்

யர்கள்வசம்விட்டு அப்போதுமரித்த அமருகன் என்ற ஒருரா ஜாவின் சரீரத்தில் தனது லிங்கசரீரத்துடன் பிரவேசம்செய்து அந்தராஜாவின் ஸ்திரீகளை அனுபவித்து "அமருகம்" என்று சிருங்கார ப்ரதானமான ஒருகாவியத்தையும் எழுதினர். இவ்விதம் மண்டனமிச்ருடைய பத்தினியையும் ஜயித்தபின், மண்டனமிச்ரர் ஸுரேச்வராசார்யாள் என்றபெயருடன் ஆசார் யாளுக்கு சிஷ்யரானர். பிறகு தேசாடனம் செய்துகொண்டு ஆசார்யாள் பட்டணத்திற்குப் போனபோது அங்கு பிராபக ரர் என்ற மஹாமீமாம்ஸகரின் குமாரன் பிறவி ஊமையாக இருந்தவனை ஆசார்யாளிடம் கொண்டுவந்து விட்டவுடன், ஆசார்யாள் அக்குழந்தையைப்பார்த்து कस्त्वम् जड; என்று கேட்டதற்கு नाहम् जड: என்று ஆரம்பிக்கிற हस्तामलक என்று சொல்லப்படுகிற ஐந்து ச்லோகங்களைச்சொன்னர். அந்த ஊமைப்பையன் தான் ஆசார்யாளிடம் ஹஸ்தாமலகர் என்ற பெயருள்ள சிஷ்யரானர். (தொடரும்.)

ரு-வது ஜீவன் ஜலமயமா.

ஜீவன் ஜலமயம்தான். ஆனல் இதுஜலமயமென்று எதற் காக ஒப்புக்கொள்ள வேண்டுமென்றுல் இறந்தபிறகு மறுபிறப் புக்கு வருகிறவரை இந்த ஜீவன் ஜலமயமா யிருக்கிறுனென்று சாஸ்திரம் கூறுகின்றது. அதெவ்விதமெனில் சாந்தோக்கியோ பனிஷத்தில் ஐந்தாவதில் ஹோமம் செய்யப்பட்ட ஜலம் புருஷனென்ற பெயரையடைவதெப்படி என்றுகேட்டு அதற்கு ஸமானமாய் ஸ்வர்க்கம், மேகம், பூமி, புருஷன், ஸ்திரீ என்ற ஐந்து அக்னிகளென்றும் அவ்வைந்தில் சிரத்தை, ஸோமன், விருஷ்டி, அன்னம், சுக்லம் என்று ஐந்துதிரவியம் ஹோமம்செய் யப்படுகிறதென்றும் சொல்லி இந்த ஐந்தாவது ஆஹுதியால் ஹோமம் செய்யப்படுகிற ஜலம்தான் புருஷனென்ற பெயரை அடைகிறதென்றுமிருக்கிறது. இங்கு ஐந்தாவது ஆஹுதியா

லுள்ள ஜலம்தான் என்று சென்னதினுல் மற்றகீழ் நான்கு ஹோமங்களிலும் ஜலரூபம் தானென்றேற்பட்டது. இப்படிஜல மயமென்பது யோக போக விஷயத்திலேயே தெளிவாய் ஏற் படுமானுல் இங்குவீணுப் வளர்க்காமல் மேற்செல்வோம். இனி எல்லோரும் ஓரேமார்க்கத்திற் போவார்களாவென்றும் ஒருஊ ரிலிருந்து இறந்து புறப்படும் ஜீவர்கள் பேசிக்கொள்வார்களா வென்றும் கேட்டீர்கள், இதற்குச்சமாதானம், இவர்களுக்கு ஜலமயமான சரீரமிருப்பதாலும் வாக்குமுதலிய இந்திரியங்க ளிருந்தாலும் எல்லாம் கட்டுப்பட்டு வெளிஞானமில்லாமல் தன் தன் கன்மப்பயனுல் அவரவர்களுக்கேற்படும் சுகதுக்கங்களை அனுபவித்துக்கொண்டுதான்செய்தபாபச்செயலால்தனக்கேற் படும் கஷ்டத்தையும் இதற்குமுன் தனக்கேற்பட்ட பலகோடி ஜன்மாவையும்பற்றி மட்டிலும் சிந்திக்கலாமே தவிர வேறு வகைஇல்லை. இனிஇத்தகைய ஜீவன் செல்லும் மார்க்கத்தை விசாரிப்பாம். இச்சீவனுக்கு தூமாதி மார்க்கமென்றும் அர்ச்சி ராதி மார்க்கமென்றுமிரண்டு பாதைஉண்டு. இதையே தேவயா னமென்றும் பிதிருயானமென்றும் கூறுவர். இனிஎதில் யார் செல்வாரென்றுல்ஆத்மவித்தையாலான்மஞானம் பெற்றபெரி யோர் அர்ச்சிராதி மார்க்கமடைவார். இஷ்டா பூர்த்தம் முத லிய கன்மம் செய்தவர் தூமாதிமார்க்கத்திற்குரியவர். அர்ச்சி ராதி மார்க்கமென்றுல் ஜோதிகிளம்பினுல் எப்படி கிளம்புமோ அதுபோற்செல்வார். தூமமென்றுற் புகைகிளம்பினுல்நேராக வேமேற்செல்லாது. ஏறியும் இறங்கியும் சுருண்டும்போகும். அத்தகைய மார்க்கமடைந்தவர் ஏறியும் இறங்கியும் போவார். ஆனுல் இதுஉண்மையான அர்த்தமல்ல. மற்றுஇதன்பெய ருக்கு இவ்வர்த்தம் உரித்தாய் இருக்குமென்று சொன்னேன். ஆனுல்இதன் உண்மையான அர்த்தம் பின்வெளிவரும். ஆகவே இம்மார்க்கங்களால் ஜீவன் போகிறதென்றுயிற்று. இதில் அர்ச் சிராதி மார்க்கம் செல்பவர்கள் மறுபடி இவ்வுலகிற் திரும்ப மாட்டார்கள். (தொடரும்)

எம். என். சுப்பிரமணிய சாஸ்திரிகள்.